பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 10 செவ்வாய்க்கிழமை (24-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 205

# வன்னி படை நடவடிக்கை மீண்டும் நேற்று ஆரம்பம்!

## மீனவர்கள் ஒபபடைப்பு

சென்னை· ஜூன் 24

இலங்கைக் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட நான்கு இந்திய மீனவர்கள் கடந்த சனிக்கிழமை கச்சதீவுக்கு அன்மையில் நடுக்கடலில் வைத்து இந்திய கரையோரக் காவல் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-10)

## புளியங்குளம் நோக்கி இருமுனைகளில் நகர்வு

கொழும்பு, ஜூன் 24

தாண்டிக்குளம், நொச்சிமோட்டை பகுதிகளில் கடந்த 10 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இடை நிறுத்தப்பட்டிருந்த 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்காப் படைகள் நேற்று மீண்டும் ஆரம்பித்தன.

இந்த மூன்றாவது கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகள் இரு முனைகளில் புளியங்குளத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள 53 ஆவது படையணியும்—

வவுனியா வழியாக பெரிய மடு வரை முன்னேறி அங்கு நிலைகொண்டுள்ள 55 ஆவது படையணியுமே தற்போது புளியங்குளம் நோக்கிய நகர்வை ஆரம்பித்திருக்கின்றன:

யுத்த டாங்கிகள், ஆட்லறிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதம் முன்னேறும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளத்தை படைகள் நெருங்கின

கொழும்பு, ஜூன் 24

பெரியமடுவிலிருந்து நேற்று முன்னேறத் தொடங்கிய 55 ஆவது படையணியின் துருப்புகள் புளியங்குளத்துக்கு மிகச் சமீபமான தூரம் வரை நகர்ந்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

அந்தப் படையணிக்கு புளியங்குளத்தின் எல்லைப்பகுதி தெரிவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

முன்னேறும் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய ஆட்லறித் தாக்குதல்களில் ஒன்பது படையினர் உயிரிழந்ததாகவும், 41 படையினர் காயமுற்றதாகவும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

காயமுற்ற படையினர் அநுராதபுரம் மற்றும் வவுனியா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிரானில் நேற்று மாலை மோதல்! இடையில் சிக்கி போதகர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் கிரானில் நேற்று மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இடையில் சிக்கி வண. போல் ரத்தினம் என்ற கிறிஸ்தவ பாதிரியார் உயிரிழந்தார்.

வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் கும்புறுமுலை முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-21)

## கைதானோரின் பெற்றோர்கள் 7 ஆம் திகதி ஜனாதிபதியை சந்திப்பர்

மட்டக்களப்பு, ஜூன் 24

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

இத் தினத்தில் அவர்களைச் சந்திக்க ஜனாதிபதி நேரம் ஒதுக்கியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை — கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த சில பிரதிநிதிகள் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ளதாகத் தெரியவந்தது.

## சிலாபத்தில் கலிபர் ரவைகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 24

சிலாபம் பகுதியில் வீடு ஒன்றில் தேடுதல் நடத்திய படையினர் 90 கலிபர் ரகத் துப்பாக்கிக் குண்டுகள் பத்தொன்பதைக் கண்டுபிடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது அந்த வீட்டில் இரு சிங்களவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த ரக துப்பாக்கிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படக் கூடியவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-21)

## தமிழ்த் தினப் போட்டியில் யாழ். மாணவர்கள் முன்னணி

திருகோணமலை, ஜூன் 24

நேற்று திருகோணமலையில் முடிவடைந்த—வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித்திறன் போட்டிகளில் யாழ். மாவட்டம் கூடுதல் இடங்களைத் தட்டி முன்னணி நிலையைப் பெற்றது.

யாழ்ப்பாணத்தின் இரண்டு வலயங்களையும் சேர்ந்த மாணவர்கள் 12 நிகழ்ச்சிகளில் முதலிடத்தையும், 15 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் 16 நிகழ்ச்சிகளில் மூன்றாம் இடத்தையும் பெற்று மொத்தம் 43 பரிசில்களைத் தட்டிச் சென்றனர்.

ஒவ்வொரு மாவட்டமும் பெற்ற இடங்கள் வருமாறு:-

யாழ். வலயம் I

யாழ்ப்பாணம் வலயம் ஒன்று:- முதலாம் இடம் — 4, இரண்டாம் இடம் — 10, மூன்றாம் இடம் — 5.

யாழ். வலயம் II

யாழ்ப்பாணம் வலயம் இரண்டு:-முதலாம் இடம்—8

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மீண்டும் அஷ்ரப்பிடம் ஒப்படைப்பு

### கப்பல்துறை அவரிடமிருந்து பறிப்பு

கொழும்பு, ஜூன் 24

அமைச்சர் அஷ்ரப்புக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மீண்டும் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதே நேரம் அவரிடமிருந்த கப்பல் துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற நாள் முதல் துறைமுகங்கள், கப்பல், புனர்வாழ்வு — புனரமைப்பு அமைச்சராக அஷ்ரப் இருந்து வந்தார்.

ஆனால் கடந்த 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு — புனரமைப்பு அமைச்சு, கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சு எனக் குறுக்கப்பட்டது.

இதனால் சீற்றமுற்ற அஷ்ரப் அரசுடன் கடும் போக்கை கடைப்பிடிக்கத் தீர்மானித்திருந்தார் என்பதும் —

எனினும் ஜனாதிபதியுடன் அவர் நடத்திய பேச்சுக்களை அடுத்து இப்பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காண இணக்கம் காணப்பட்டது என்பதும் —

அவ்வப்போது செய்திகளாக வெளியாகியிருந்தன.

நேற்று அஷ்ரப்புக்கு மீண்டும் புனர்வாழ்வு — புனரமைப்பு அமைச்சு ஒதுக்கப்பட்டது. ஆனால் அவரிடமிருந்த கப்பல் துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த மாற்றத்தின்படி அஷ்ரப் இனிமேல் துறைமுகங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகச் செயற்படுவார்.

இந்த அமைச்சரவை மாற்றம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்த போதிலும் அம்பாறை சென்றிருந்த அமைச்சர் அஷ்ரப் நேற்று கொழும்பு திரும்பாததால் தற்போதைய மாற்றத்துக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுகால்மடம் பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, கோம்பையன் மணல் மயானப் பகுதிக்கு அப்பால்— ஆறுகால்மடம் பிரதேசத்தில் — நேற்றுக் காலை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் ஒன்று இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

காலை 7.00 மணிக்கு அப்பகுதியில் வெடித்த பாரிய குண்டுச் சத்தத்தைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களைத் தொடர்ந்து மேலும் இரு குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

இளைமோர் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிய... தப்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை. (உ-15)

## வெடிமருந்துடன் நடமாடியவர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு ஏறாவூரில் பொலீஸ் நிலையம் அருகே வெடிமருந்துகளுடன் நடமாடிய ஒருவர் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நபரிடமிருந்து பன்னிரண்டரைக் கிலோ பொற்றாசியம் மற்றும் 37 கிலோ வெடிமருந்துகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-21)

## ஸ்ரீமா—சிறிமானி சந்திப்பு நேற்று நடக்கவில்லை

கொழும்பு, ஜூன் 24

நேற்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவி சிறிமானி அத்துலத் முதலி சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை.

அனேகமாக இன்று இருவரும் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் பதவியை இழந்த சிறிமானி அத்துலத் முதலி தமது நிலைப்பாடு குறித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அமைச்சர் பதவியை கேட்டோ அல்லது விரும்பியோ நான் பெறவில்லை. அமைச்சராக இல்லாமலேயே மக்களுக்குச் சேவையாற்ற முடியும்- ஆனால் எனது அமைச்சர் பதவியைப் பறித்ததன் மூலம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் எமது கட்சி இடம்பெறுவது தொடர்பான ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கின்றது.

எனினும் நாம் தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருப்போம். என்றாலும் எமது கட்சியின் கொள்கைக்கு அமையவே செயற்படுவோம்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்
## க.பொ.த. (உ.த.) பரீட்சை
# விசேட அறிவித்தல்

சைவ பரிபாலனசபையினரால் ஆண்டு 13 மாணவர்களுக்கு 24-06-97 — 27-06-97 வரை நடைபெற இருந்த தேர்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளது; தேர்வு நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்

(47970)



## எமது புதிய வெளியீடு!
விஸ்ணுவர்த்தன் - சித்தாரா நடித்த
# பெண்ணின் பெருமை
மேலும் சில படங்கள் ஒறிஜினல் பிரதியாக வெளிவந்துள்ளன.

பிரதி ஒன்றின் விலை - 350/-

# வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(47976)


# மரண அறிவித்தல்கள்

## பரஞ்சோதி முதலியார் ஜெயரத்தினம்
(இளைப்பாறிய தபால் தொலைத் தொடர்பு பரிசோதகர்) (I.P.T.)

யாழ். திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியைச் சேர்ந்த பரஞ்சோதி முதலியார் ஜெயரத்தினம் (இளைப்பாறிய தபால் தொலைத் தொடர்பு பரிசோதகர்) 10-6-97 அன்று மல்லாவியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி முதலியார் திருமதி ப கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் திருமதி ஜேசுதாசன் நாகபூசனி (இயக்குநர் பட்டதாரி அக்கடமி), ப. ஜீவரத்தினம் (ஆளணி முகாமையாளர், இ.போ.ச. கோண்டாவில்), காலஞ்சென்ற ப. தருமரத்தினம் (இ. போ.ச. உத்தியோகத்தர்), செல்வி ப இரத்தினபூசனி (ஆசிரியை, சிறுவர் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வி ஜே. சுதர்சனா (பட்டதாரி ஆசிரியை. குருநாகல்), செல்வன் ஜே. நிமல்ராஜ் (மாணவன்,பேராதனை பல் மருத்துவ பீடம்), செல்வி. ஜே. ஜெயதர்சனா (மாணவி, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வி ஜீ. சாயிலதா (நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்),செல்வன் ஜீ.சஜீவ்ராம்(க. பொ.த உயர்தர மாணவன்), செல்வி த. கிருத்திகா (மாணவி, விவேகானந்தா கல்லூரி,கொழும்பு), செல்வன் த.மதுரன் (மாணவன் விவேகானந்தா கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 06 - 1997 அன்று மல்லாவியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ப. ஜீவரத்தினம்
(சகோதரன் — ஆளணி முகாமையாளர், இ. போ. சபை) கோண்டாவில்)

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(479768)

## திருமதி
## இலட்சுமிப்பிள்ளை நாகரத்தினம்

வட்டுக்கோட்டை, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை நாகரத்தினம் 22- 6- 97ல் வவுனியாவில் காலமானார்,

அன்னார் காலஞ் சென்ற நாகேசு சின்னத்துரையின் அன்பு மகளும், நாகரத்தினத்தின் (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்) அன்பு மனைவியும், செல்வரத்தினம் (மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) இந்திராணி, கலாமாலினி (ஆசிரியை வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் N.S. கந்தசாமியின் (முன்னாள் உப அதிபர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி) அன்புச் சகோதரியும், தங்கம்மா, மாரிமுத்து (நிர்வாக உத்தியோகத்தர், முல்லைத்தீவு,கச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும், சுதாகரன் (கொழும்பு), பக்தகௌரி (மாணவி,யாழ். இந்து மகளிர் கல்லூரி), செல்வகுமாரன் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு), தாமரைச் செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் ;
நா. செல்வரத்தினம்
(மகன்)

40/3, புகையிரதப்பாதை,
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(47963)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## இராமநாதன் நுண்கலைப் பரீட்சை - 1995

முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட
இசைமாணி/ நாட்டியமாணிப் பரீட்சை - 1995
முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட
இசைமணி/ நாட்டியமணிப் பரீட்சை - 1995

மேற்குறித்த 1995 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்குத் தகுதியுடைய மாணவர்கள், பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையிலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை பிரதிப் பதிவாளருக்கு 1997-07-31 ஆம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது நவீன சந்தை, யாழ்ப்பாண மக்கள் வங்கி கிளையிலோ செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1997-07-31ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997-06-17.

(சி/995)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
வெளிவாரிப் பரீட்சைகள் 1995

பொதுக் கலைமாணி
பகுதி I, II — 1995
சிறப்புக்கலைமாணி
பகுதி I, II, III — 1995
வர்த்தகமாணி
பகுதி I, II, III — 1995

மேலே குறிப்பிட்ட பரீட்சைகள் ஆகஸ்ட்/செப்டெம்பர்மாதத்தில் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப்படிவத்தைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/- செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை வெளிவாரி அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் யாவும் 30-07-1997வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

- பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/994)

# கூரே பாவித்த துப்பாக்கிகளை மீளப் பெற அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரேக்கும் அவரது பாதுகாவலர்களுக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெறுவதற்கான நடவடிக்கையை படையினர் நேற்று ஆரம்பித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது.

முன்னைய ஆட்சிக்காலத்தின்போது சிறிசே கூரேக்கு 7 துப்பாக்கிகளும் 70 ரவைகளும் வழங்கப்பட்டிருந்தன என்றும்—

இந்த ஆயுதங்களைப் பயன்படுத்திய பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிசேன கூரேயிடம் இருந்து ஒரேயொரு துப்பாக்கி மட்டுமே முன்பு மீளப் பெறப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## மோசமான வீதி

யாழ்ப்பாணம் ஜூன் 24

காங்கேசன்துறை வீதியுடன் இணைந்ததான சுதுமலை- மானிப்பாய் வீதி ஒரு கிலோ மீற்றர் தூரம் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

(இ-111)

## லியோ கழக உறுப்பினர்கள் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி லியோ கழக உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரையும் ,இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு கழகத் தலைவர் கேட்டுள்ளார். (ஐ)


உ

## வண்/ கிழக்கு கலட்டி
## எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலய
## மகாசபைக் கூட்டம் - 1996/1997

வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலய மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 29-06-1997 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மகாசபை அங்கத்தவர்களையும் ஆலய சுற்றாடலில் வசிக்கின்ற அம்பாள் அடியார்களையும் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய அங்கத்தவர்கள் மகாசபை அங்கத்தவர்களின் சிபார்சுடன் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். புதிய ஆண்டுக்குரிய அங்கத்துவப் பணத்தை உடன் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கோருகின்றோம். தவறாது சமுகம் தருமாறும் வேண்டிக்கொள்கின்றோம்.

கலாநிதி க. குணராசா
தலைவர், ஆலய பரிபாலனசபை.
14-06-1997

(47972)



## மனதாரப் பாராட்டுகின்றோம்

யாழ். வலயம் - 2 பாடசாலைகளின்
வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றிய
## வட இந்து மகளிர் கல்லூரி
மாணவிகள் குழுக்களை
குறிப்பாக முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்ட
19 வயதுக்கு உட்பட்ட குழுவை
பழைய மாணவிகளாகிய நாம்
மனதாரப் பாராட்டுகின்றோம்.

திருமதி ஜெயபூபதி குலசிங்கம்,
செல்வி சு. குலசிங்கம்,
பருத்தித்துறை.

(47969)


# மரண அறிவித்தல்

## பரமு.தேவராஜா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமு தேவராஜா 22-6-1997 அன்று காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற பரமு சீதேவி ஆகியோரின் மகனும், இராசம்மாவின் அன்புக்கணவரும், சிறீஸ்கந்தராசா, நவரெத்தினராசா[ஜேர்மனி], அகிலாண்டநாயகி [ஜேர்மனி], சாரதாதேவி [யாழ். பல்கலைக்கழக நான்காம் வருட முகாமைத்துவ மாணவி], ஆனந்தநாயகி [யாழ். பல்கலைக்கழக இரண்டாம்வருட வெளிவாரி மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீகாலிங்கத்தின் [ஜேர்மனி] அன்பு மாமனாரும், கஜனவன், வைஷ்ணவன், வைஷ்ன்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [24-6-97) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
தே. சிறீஸ்கந்தராசா
[மகன்]

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

[47973]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# இந்திய - பாக். செயலர்கள் 3ஆம் நாளாகச் சந்தித்துப் பேச்சு

இஸ்லாமாபாத், ஜூன் 24

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் சல்மான் ஹைதர், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலருடன் மூன்றாவது நாளாக பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

தலைநகர் இஸ்லாமாபத்துக்கு வடக்கேயுள்ள மலைப்பிரதேச நகரான மோலே என்ற இடத்தில் இப்பேச்சுக்கள் இடம் பெற்றன.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுச் செயலர் சல்மான்ஹைதர், இரண்டுதரப்பினரும் கலந்தாலோசிப்பதற்கான அடித்தளத்தை அமைக்க ஆரம்பித்து விட்டதாகவும், எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்று இந்தியா கூறுகின்றது. அது எந்த நாட்டின் பகுதி என்பதை தீர்மானிக்கும் உரிமை அந்தப்பகுதி மக்களிடமே விடப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் தெரிவிக்கிறது. (இ-5)

# பொல்பொட் குறித்து மாறுபட்ட தகவல்கள்

நொம்பென், ஜூன் 24

கம்போடியாவின் கெமரூச் இயக்கத்தின் தலைவர் பொல்பொட் தொடர்பாக கம்போடியாவின் முதலாம் பிரதமரும் இணைப்பிரதமரும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

மிகவும் சுகயீனமுற்ற நிலையில் கைது செய்யப்பட்ட பொல்பொட் கம்போடியாவின் தூரவடக்கு பள்ளத்தாக்குப் பகுதி ஒன்றில் வைக்கப்பட்டுள்ளார் என கம்போடியாவின் முதலாம் பிரதமர் நெரோடம் றணறித் தெரிவித்து உள்ளார்.

ஆனால் இரண்டாம் பிரதமரோ பொல்பொட் இறந்து விட்டார் என்று அறிவித்துள்ளார்.

இந்த முரண்பாடு நிறைந்த தகவல்களால் குழம்பிப் போயிருக்கும் பத்திரிகையாளர்கள் பொல்பொட்டின் உயிருள்ள அல்லது இறந்த உடலைக் காட்டுங்கள். இல்லையென்றால் குறைந்தபட்சம் புகைப்படத்தையாவது காட்டுங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேசமயம்—கெமரூச் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்று தற்போது பொல்பொட்டுக்கு எதிராகத் திரும்பிவிட்ட ஒரு பிரிவினரால் பொல்பொட் பிடித்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் –

வடபகுதிக் காடுகளுக்குள் இருக்கும் தளம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அவரைச் சந்தித்ததாகவும் கம்போடியாவின் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான ஜெனரல் மீக் பொன் ஸாய் என்பவர் தெரிவித்துள்ளார்:

பொல்பொட் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார் என்றும் —

விரைவில் அரசாங்கத்திடம் அவர் ஒப்படைக்கப்படுவார் என்றும் — அவர் கூறினார்.

இதேவேளை — 1979 ஆம் ஆண்டுக்கு பின்னர் பக்கசார்பற்ற எவரும் பொல்பொட்டை பார்க்கவில்லை என்றும்—

அத்துடன் கெமரூச் கெரில்லாக்கள் நிலைகொண்டுள்ள தாய்லாந்து எல்லைக்கருகில் உள்ள பகுதிகளிலிருந்து பக்கசார்பற்ற தகவல் எதனையும் பெறுவது மிகக்கடினமாக இருப்பதால் ஜெனரலின் மேற்படி கூற்று உண்மையா என்பதை சொல்லமுடியாமலுள்ளது என்றும்— செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவித்தன. (இ-5)

# பொல்பொட்டுக்கு எதிராக சர்வதேச நீதி விசாரணை

## அமெரிக்கா கோரிக்கை

'கெமரூச்' இயக்கத்தின் பலம் வாய்ந்த தலைவரான பொல்பொட் சர்வதேச நீதி விசாரணையை எதிர்நோக்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

அந்த விவகாரம் குறித்து மற்றைய நாடுகளுடன் ஆலோசனை நடத்தப்படுவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மாரீடலின் ஆல்பிறைற் தெரிவித்துள்ளார்,

பொல்பொட்டுக்கு எதிராக நீதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் உறுதியாகத் தெரிவித்தார். (இ-10)

# முதலையுடன் மல்யுத்தம் புரிய இஸ்ரேல் நீதிமன்று தடை!

ரெல்அவிவ், ஜூன் 24

இஸ்ரேலின் நகர்ப்புற சுற்றுலாத் தலங்களில் ஆண்டுதோறும் நடக்கின்ற முக்கிய ஒரு போட்டி முதலைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நடக்கின்ற மல்யுத்தப் போட்டி ஆகும்.

ஆனால் இந்த ஆண்டு முதலை- மனித மல்யுத்தப் போட்டிக்கு இஸ்ரேல் உச்ச நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. விலங்குகள் பாதுகாப்பு இயக்கத்தினர் தாக்கல் செய்திருந்த மனுவின் பெயரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மந்திரவாதிக்கு ஏற்பட்ட கதி!

மணிலா, ஜூன் 24

மந்திரவாதி ஒருவரை அடித்துக் கொன்று, அவரது நெஞ்சைப்பிளந்து, இருதயத்தை தனியாக வெளியே எடுத்து. ஆளுக்குப் பாதி பாதியாக இருவர் உட்கொண்டனராம்.

இச் சம்பவம் இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் இடம் பெற்றது.

அயல் வீட்டுக்காரரான பிரஸ்தாப மந்திரவாதி தம்மைக் கொலை செய்யச் சதி செய்கிறார் என்ற சந்தேகம் காரணமாக இந்த இருவரும் இக்கொலையைச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கொலை கிராம மக்கள் முன்னிலையில் செய்யப்பட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது. (இ-5)

### சோமாலியாவில் கடமையாற்றிய

# ஐ. நா. அமைதிப்படையினர் மீது கொலை, துன்புறுத்தல் குற்றச்சாட்டு

மொகடிஸ், ஜூன் 24

நான்கு வருடங்களுக்கு முன்னர் சோமாலியாவில் கடமையாற்றிய ஐ நா. சமாதானப் படையினருக்கு எதிராக தற்பொழுது கொலை, சித்திரவதை, துன்புறுத்தல் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

சோமாலியாவில் ஐ. நா சமாதானப் படையில் இடம் பெற்றிருந்த பெல்ஜியம் நாட்டவர்களைச் சேர்ந்த மூன்று படையினருக்கு எதிராக பெல்ஜியம் நீதிமன்றத்தில் தற்பொழுது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒருசோமாலியச் சிறுவனை சுட்டதாகவும் மற்றும் ஒரு சிறுவனுக்கு பலவந்தமாக உப்புத் தண்ணீர் பருக்கியதாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதே போன்ற குற்றச்சாட்டுக்கள் ஐ. நா. சமாதானப் படையில் கடமையாற்றிய ஏனைய நாடுகளைச் சேர்ந்த படையினர் சிலருக்கு எதிராகவும் சுமத்தப்பட்டுள்ளன.

இத்தாலி, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படையினர் சிலர் அந்தந்த நாடுகளில் இது தொடர்பான குற்றச்சாட்டுக்களை எதிர் நோக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# குஜ்ராலின் வீட்டில் கேட்ட வெடி ஓசை!

புதுடில்லி, ஜூன் 24

புதுடில்லியில் இந்தியப்பிரதமர் குஜ்ராலின் மாளிகையின் நிலப்பரப்பில் பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்பு வெடித்ததில் அறை ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டது.

வெடிச்சத்தம் பெரிதாகக் கேட்டதால் தீவிரவாதிகளின் தாக்குதல் ஏதாவது நடந்துவிட்டதோ என பாதுகாப்பு அதிகாரிகள் பதற்றமும் பரபரப்பும் அடைந்தனர்.

மின் இணைப்பு வெடித்த போது ஏற்பட்ட தீயை தீயணைப்புப்படையினர் விரைந்து சென்று அணைத்தனர். சம்பவம் நடந்த போது குஜ்ரால வீட்டில தான் இருந்தார். (இ-5)

# ஈராக் மீதான நடவடிக்கை குறித்து உறுப்பு நாடுகளிடையே இழுபறி!

தெஹ்ரான், ஜூன் 24

ஐ. நாவின் ஆயுதப்பரிசோதனையாளர்கள் ஈராக்கில் கட்டுப்பாடின்றி நடமாடுவதற்கு அனுமதி மறுத்த ஈராக்கின் நடவடிக்கைக்கு எதிராக எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக பல நாள்கள் நீடித்த இராஜதந்திர இழுபறிகளுக்குப் பின்னர் ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் பின்னிரவுவரை நீடித்தது.

ஈராக் தொடர்பாக கடுமையான போக்கினைப் பின்பற்றிவரும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் அரசாங்கத்தின் மீதும் அதன் இராணுவ அதிகாரிகள் மீதும் உடனடியான பிரயாணத்தடை விதிக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் சபையிடம் கேட்டுக் கொண்டன.

ஆனால் பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

ஐ. நாவின் ஆயுதப் பரிசோதனையாளர்கள் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் பாதுகாப்புச்சபைக்கு அடுத்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை ஈராக் மீதான நடவடிக்கையை ஒத்திப் போட இறுதியில் இணக்கம் ஏற்பட்டது.

சதாம் ஹுசேய்னை எவ்வாறு வழிக்குக் கொண்டு வரலாம் என்பது தொடர்பாக பாதுகாப்புச்சபை உறுப்பினர்களிடையே நிலவுகின்ற கருத்து வேறுபாடுகளைப் பூசிமெழுகுவதாகவே இந்த சமரசம் இருப்பதாக இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

உடனடியான தண்டனையில் இருந்து ஈராக் தப்பி விட்டபோதும் இந்த சமரச தீர்மானம் நஞ்சு நிறைந்தது என்று ஐ. நாவில் ஈராக்கின் தூதுவராக இருக்கும் நிஸார் அம்பூன் கூறினார், (ஐ-5)

## உலக அரங்கில்

# இஸ்ரேல் அமைச்சரவை மாற்றம் குறித்து இன்று அறிவிக்கப்படும்

ரெல் அவிவ், ஜூன் 24

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தானியாகு தனது அமைச்சரவையில் பெரிய மாற்றங்களை இன்று அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

செல்வாக்கு மிக்க நிதியமைச்சர் ஒருவரை கடந்த வாரம் பதவி நீக்கம் செய்ததில் இருந்து நந்தானியாகு தனது கூட்டணிக் கட்சிகளிடமிருந்து எதிர்ப்புக்களை எதிர்நோக்கி வருகிறார்.

நாளை அவரது அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினை எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்யவுள்ளன, (இ -5)

# சீனாவில் அதி நவீன கணனி

பீகிங், ஜூன் 24

அதி நவீன கணனி ஒன்றைச் சீனா கண்டுபிடித்துள்ளது. ஒரு விநாடிக்கு 1300 கோடி செயற்பாடுகளை இந்த நவீன கணனி மேற்கொள்ளும் ஆற்றலுடையது.

எத்தகைய சூழ்நிலையிலும் செயற்படக் கூடிய ஆற்றல் இந்தக் கணனியின் விசேட சிறப்பு அம்சமாகும்.

சமீபத்திய அதி நவீன சர்வதேசத் தரங்களுக்கு அமைய இக்கணனி தயாரிக்கப்பட்டுள்ளது.

இக் கணனியின் பதிவேட்டுக் கருவிகள் அனைத்தும் சம காலத்தில் செயற்படக் கூடியவை.

மேலதிக உதிரிப் பாகங்களைப் பொருத்துவதன் மூலம் இக் கணனியின் செயற்பாடுகளை மேலும் [illegible] முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ -10)

# மாட்டின் லூதர்கிங் கொலை: ஜோன்சன் சம்பந்தமா?

நியூயோர்க் ஜூன் 24

மார்ட்டின் லூதர் கிங்கின் கொலையுடன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி விண்டன் ஜோன்சனுக்கும் தொடர்பு உள்ளதா?

தமது தந்தையின் கொலையுடன் அப்போதைய ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் உட்பட அரசாங்க அதிகாரிகள் பலர் சம்பந்தப்பட்டிருப்பதாக மார்ட்டின் லூதர் கிங்கின் புதல்வர் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

1968 ஆம் ஆண்டு மார்ட்டின் லூதர்கிங் கொலை செய்யப்பட்டார். (இ)

# மரக்கறி, பழவகைகள் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம்

நாளாந்தம் உணவுடன் மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் அதிகமாகச் சேர்த்து வந்தால் இருதய நோயிலிருந்தும் புற்றுநோயிலிருந்தும் உடலைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று நியூசிலாந்து ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாளாந்தம் மரக்கறி வகைகளும் பழவகைகளும் உட்கொண்டால் இரத்தத்தில் உள்ள விட்டமின்களின் அளவு அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விட்டமின் ஏ.சி.ஈ. ஆகியவை மரக்கறி வகைளிலும் பழங்களிலும் இருப்பதால் சத்துக்களை அதிகரித்து இருதய புற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

மரக்கறி, பழவகைகள் கொலஸ்ரோலின் உயர்வை கட்டுப்படுத்துவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

காரைநகர் திக்கரை முருகன் ஆலய கொடியேற்றத் திருவிழா நாளை 25 ஆம் திகதி நடைபெறும்.

அத்துடன் தொடர்ந்து 10 நாள் திருவிழா நடைபெறும். (இ)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவலிங்கம் மகாகணபதி கோயில் (பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்) மணவாளக் கோலத் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் நடைபெறும்.

மாலையில் திருக்கல்யாண நிகழ்ச்சிகள் நடைபெற்று உள்வீதி உலாவும் இடம் பெறும்.

(இ-4)

★ ★ ★

அல்வாய் வடக்கு வியாபாரி மூலை ஆதிமலை வீரபத்திரர் சுவாமி கோயில் மணவாளக்கோல உற்சவமும், மகாசங்காபிஷேசமும் இம் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

பிரம்மஸ்ரீ சிவாசுதேவக்குருக்கள் மணவாளக்கோலஉற்சவத்தையும், சங்காபிஷேகத்தையும் நடத்தி வைப்பார். (இ-173)

கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயத் திருவிழாவுக்கான ஆராதனைகள் எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

தினமும் பிற்பகல் 4. 30 மணிக்கு செபமாலையும் திருப்பலியும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெறும். (இ)

★ ★ ★

சந்நிதியான்ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர் வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் ''முருகன்பாமாலை'' இடம் பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை ஆசிரியர் த. பாலகுமார் நிகழ்த்துவார்.

★ ★ ★

அரியாலை - பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் சங்காபிஷேக மணவாளக்கோலத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பித்து பகல் 10. 45 மணிக்கு 1009 சங்காபிஷேகமும் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தண்டிகையில் அம்பாள் விஷேட மேள வாத்தியத்துடன் வீதியுலா வருதலும் இடம் பெறும்.

# காணாமற் போன 258 பேர் பற்றி ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை

## பாதுகாப்பு அமைச்சு விசாரணைக் குழு தெரிவிப்பு

குடாநாட்டில் காணாமற் போன 258 பேர் பற்றி ஒரு மாத காலத்துக்குள் பாதுகாப்பு அமைச்சு மூலமாக அறிக்கை ஒன்றை வெளியிடுவதாக பாதுகாப்பு அமைச்சு விசாரணைச் குழு உறுதி அளித்துள்ளது.

காணாமற் போனோர், கைதானோர், பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்குழுவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

51 ஆவது படையணி தலைமைப் பதி மேஜர் ஜெனரல் பலேகல்ல, ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்தினர் ஆகியோரின் ஏற்பாட்டில் இச் சங்கத்தின் தலைவர், உப தலைவர், செயலாளர் ஆகியோர் கொண்ட குழு பலாலியில் விசாரணைக் குழுவினரைக் கடந்த சனியன்று சந்தித்தது.

இந்தச் சந்திப்பின்போது காணாமற் போனவர்கள் தொடர்பான தகவல் தெரியாது அவரது உறவினர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை குழுவினர் எடுத்துக் கூறினர்.

கடந்த ஜனவரியில் சாட்சியமளித்த 53 முறைப்பாட்டுக்காரர் தொடர்பாகவும் —

ஏப்ரல் மாதம் சாட்சியமளித்த 58 முறைப்பாட்டுக் காரர்கள் தொடர்பாகவும்—

கடந்த வாரம் சாட்சியமளித்த 147 முறைப்பாட்டுக் காரர்கள் தொடர்பாகவும்—

ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிப்போம். பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்ட முறைப்பாட்டுக் காரர்களுக்கு நேரடியாக பதில் அனுப்பும். என்று விசாரணைக் குழுவினர் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

ஏனைய முறைப்பாட்டுக் காரர்கள் தொடர்பாக அவர்களிடம் கேட்கப்பட்டபோது, மீதியான முறைப்பாட்டுக் காரர்களை அடுத்த மாதம் நடுப்பகுதியில் அழைத்து விசாரிப்போம் என்று பதில் அளிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் தகவல் தெரியாத நிலையில் இருந்த சிலர் காணாமற்போனவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளதாக வெளியாகிய தகவல் குறித்து விசாரணைக் குழுவிடம் கேட்கப் பட்டது. ''எமது முடிவுகளை நாம் பாதுகாப்பு அமைச்சு ஊடாக முறைப்பாட்டுக்காரர்கள் அனைவருக்கும் அனுப்புவோம்'' என்று விசாரணைக் குழுவினர் பதில் அளித்தனர். (இ-3)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஹலறன் நஷனல் வங்கி, வீ. எஸ். பீ. குருப் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் பாடசாலைகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நாளை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டம் நாளை புதன்கிழமை யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெறும்.

26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 17 வயதுக்கு உட்பட்டோர் இறுதி ஆட்டத்தில்யாழ். பரியோவான் கல்லூரி அணியும் சம்பத்திரிசியார் கல்லூரி அணியும் மோதும். இப்போட்டி 26 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கும் 27 ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் ஆரம்பமாகும். (இ-4)

## விற்பனை நிலையம்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கரவெட்டி இளைஞர் கழகத்தினால் நெல்லியடியில் பல்பொருள் சில்லறை விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி சிவில்இணைப் பதிகாரி கேணல் எல்.ஏ.ஆர் விஜயரட்ண கரவெட்டி பிரஜைகள் குழுத் தலைவர் எஸ். வீரசிங்கம் ஆகியோர் மங்கள விளக் கேற்றிவைக்க, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் இவ்விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். (இ-173)

ஏப்ரல் மே மாதங்களில்

# கிளிநொச்சி மருத்துவமனையில் 49,843 பேருக்குச் சிகிச்சை

வவுனியா, ஜூன் 24

தற்போது அக்கராயனில் இயங்கும் கிளிநொச்சி மருத்துவமனையில் கடந்த ஏப்ரல் மே மாதங்களில் 49 ஆயிரத்து 843 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனையில் கடந்த இரண்டு மாதங்களில் அனுமதிக்கப்பட்டோரில் 61 பேர் இறந்துள்ளனர்.

செப்ரிசீமியா நோயால் பீடிக்கப்பட்ட8பேர் இக்கால எல்லைக்குள் அனுமதிக்கப் பட்டனர் எனவும் இவர்களில் நால்வர் இறந்தனர் எனவும் கிளிநொச்சி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-10-164)


JAFFNA SCHOOLS' CRICKET ASSOCIATION

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்

ஹற்றன் நஷனல் வங்கி
V. S. B Group
அனுசரணையுடன் நடத்தும்

துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி 1997

இறுதிப்போட்டிகள்

15 வயதின் கீழ்
புனித சம்பத்திரிசியார் கல்லூரி
எதிர்
யாழ். மத்திய கல்லூரி
இடம்: யாழ். பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்: 25 - 06 - 1997 புதன்கிழமை
காலை 8 - 30 மணி

பிரதம விருந்தினர்:
திரு. நா.க. சண்முகநாதபிள்ளை
(முன்னாள் தலைவர், யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்)

17 வயதின் கீழ்
பரி.யோவான் கல்லூரி
எதிர்
புனித சம்பத்திரிசியார் கல்லூரி
இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்
காலம் 26 - 06 - 1997 பிற்பகல் 1 - 00 மணி
27 - 06 - 1997 முற்பகல் 8 - 30 மணி

பிரதம விருந்தினர் திரு. அ. பஞ்சலிங்கம்
(முன்னாள், தலைவர் யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. தேவராஜா
கௌரவ செயலாளர்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில். (சி - 992)


# சுழிபுரத்தில் நால்வர் சுடப்பட்டது குறித்து இராணுவத்தினர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

கடந்த செவ்வாயன்று சுழிபுரத்தில் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக அச்செழுவைத் தலைமையகமாகக் கொண்ட 51 ஆவது படையணியின் கட்டளைப் பீடத்திலிருந்து அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

கடந்த ஜூன் 18 ஆம் திகதி உதயனில் ''மூளாய் - சுழிபுரத்தில் 4 பேர் சுட்டுக் கொலை'' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக திருத்தமும் விளக்கமும் தரப்படுகின்றது.

ஜூன் 17 ஆம் திகதி பொன்னாலை, மூளாய், வட்டுக்கோட்டை, மாவடி, சித்தன்கேணிப் பகுதிகளில் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர்.

மூளாயில் நடவடிக்கையை மேற்கொண்ட போது, கிடைத்த தகவலின் படி விடுதலைப்புலிகள் இருந்த வீடு ஒன்றை படையினர் சுற்றி வளைத்தனர். அந்த வீட்டிலிருந்து படைகளை புலிகள் தாக்கத் தொடங்கினர். துருப்புகள் திருப்பித் தாக்கி நான்கு புலிகளைக் கொன்றதோடு அவர்களிடமிருந்து பின்வரும் ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

- ★ ரி 56 ரைபிள் — 2
- ★ ரி 56 மகஸின் — 2
- ★ கைக்குண்டு — 2
- ★ தற்கொலைக்குண்டுச் சாதனம் — 1
- ★ வெடிக்க வைக்கும் சாதனம் — 1
- ★ சயனைட் வில்லைகள் — 3
- ★ பட்டிகள் — 2

இதிலிருந்து சண்டையில் கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் என்பது புலனாகின்றது; பத்திரிகைச் செய்தியில் விளங்க வைக்கப் பட்டது போன்று அப்பாவி இளைஞர்கள் அல்லர்.

சடலங்கள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டன. உயிரிழந்தவர்கள் அணித்தலைவர் ஏ. சிமேந்திரன், கண்ணன் (கோண்டாவில்), ஸ்ரீ (காரைநகர்), பாச்சா (சுழிபுரம்) என அடையாளம் காணப் பட்டுள்ளன.

மேலும் ஜூன் 18 ஆம் திகதி படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர். அவர்களும் அப்பாவி இளைஞர்கள் அல்லர்; அவர்கள் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகள்; ஆயுதங்களும் அவர்களிடமிருந்து மீட்கப் பட்டன

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:-

18 - 06 - 1997 உதயனில் வெளியான செய்தியில், மேற்படி பகுதிகளில் நடந்த சுற்றிவளைப்பின் போது நான்கு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், அவர்களின் சடலங்கள் அடையாளம் காணப் படுவதற்காக ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன என்று மட்டுமே—முதலில் கிடைத்த தகவல்களை— வைத்து செய்தி பிரசுரிக்கப்பட்டது. அந்தச் செய்தியில் எந்த இடத்திலும் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி இளைஞர்கள் என்று குறிப்பிடப்படவோ அல்லது அத்தகைய சாரப்பட வேறு எதுவுமோ தெரிவிக்கப்படவில்லை.

மேலும் 17 ஆம் திகதி நடந்த இச்சம்பவம் குறித்து அன்று நள்ளிரவு வரை பாதுகாப்பு வட்டாரங்களின் உத்தியோகபூர்வ தகவல்களோ அல்லது கொல்லப்பட்டவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றிய விவரங்களோ ஆசிரிய பீடத்துக்கு எட்டாததால் வெறுமனே நான்கு இளைஞர்கள் உயிரிழந்தது குறித்து — எமது செய்தியாளர்களுக்கு கிடைத்த — தகவல் மட்டுமே பிரசுரிக்கப் பட்டது.

எனினும் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நால்வரும் புலிகளே என்பது பின்னர் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதை அடுத்து, 21-06-1997 இல் வெளியான ''சஞ்சீவியில்'' சமர்க்களம் என்ற பத்தியில் இச்சம்பவத்தில் உயிரிழந்த நால்வரும் புலிகளே என்று [illegible]. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் இருந்து

# வன்னிக்குப் பொருள் எடுத்து வர லொறி உரிமையாளர்கள் மறுப்பு!

## படையினர் லொறிகளை கொண்டு செல்கின்றனராம்

வவுனியா, ஜூன் 24

வவுனியாவில் இருந்து வடக்கே ப. நோ. கூ. சங்கங்களுக்கு பொருள்களை எடுத்துச் செல்ல வவுனியா லொறி உரிமையாளர் சங்கத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

பொருள்கள் ஏற்றி இறக்கும் பணி இடம்பெறும் பறையனாளங்குளம் பகுதிக்கு வன்னிக்கான பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை இராணுவத்தினர் தமது இராணுவத் தேவைகளுக்கு எடுத்துச் செல்வதை நிறுத்துமாறு கோரியே அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

ப. நோ. கூ. சங்கங்களுக்கான பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை இராணுவத்தினர் பொறுப்பேற்று மாதக்கணக்கில் வைத்திருப்பதாகவும் —

அச்சமயங்களில் லொறிகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு அவர்கள் நஷ்டஈடு வழங்குவதில்லை என்றும் — வவுனியா லொறி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களின் இந்த நடவடிக்கையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு கடந்த இரு வாரங்களாகப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

அதேவேளை — அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் அனுப்பப்படும் பொருள்களை எடுத்துச் செல்லும் லொறிகள் இராணுவ தேவைக்கு சுவீகரிக்கப்படுவதில்லை என்று வவுனியா லொறி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

(இ-3-164)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சாவகச்சேரியில் பிரிவுபசாரம்

தென்மராட்சி, ஜூன் 24

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி இளைப்பாறிச்சென்ற 16 கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சங்க கூட்டுறவு ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நேற்று முன்தினம் சங்க கூட்டுறவு மண்டபத்தில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

நலன்புரிச் சங்கத் தலைவர் சி. சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் க. அருந்தவபாலன், தென்மராட்சிக் கோட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் சி. சுந்தரலிங்கம், சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் வே. கிருஷ்ணன், அங்கத்தவர்கள் சார்தல் திருமதி கி. மல்லிகாதேவி, வ. தர்மலிங்கம், சி. சந்திரபாலன், இயக்குநர் சபையின் சார்பில் த. சபாநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

பிரிவுபசார நாயகர்களுக்கு நலன்புரிச் சங்கத்தினால் ரூபா 5 ஆயிரம் கொண்ட பண முடிப்புகள் வழங்கப்பட்டன.

விழாமுடிவில் சங்க அங்கத்தவர்களின் நாடகமும் இடம் பெற்றது.

(இ-117)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய கணனி

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். போதனா வைத்தியசாலையின் பாவனைக்கு புதிய கணனி ஒன்று கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

இக்கணனி கணக்குப்பிரிவின் பாவனைக்காகப் பொருத்தப்பட்டுள்ளது.

(இ-15)

## உப்பு விளைச்சல்

தென்மராட்சி ஜன் 24

சாவகச்சேரி தனங்களப்பு கடற்பிரதேசத்தில் உப்பு விளைவதால் இவற்றைச் சேகரித்து விற்பதில் இப்பகுதி மக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் சாவகச்சேரி சந்தையில் ஒரு கிலோ உப்பு ஏழுரூபாவாக விற்கப்படுகிறது.

(இ-117)

## 500 பேர் - பயணக் கப்பல் மன்னார் - யாழ். சேவைக்கு

கொழும்பு, ஜூன் 24

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக மன்னார் வரும் அகதிகளை அனுப்பி வைக்க வசதியாக 500 பயணிகள் செல்லக் கூடிய கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்து தருவேன்.

மன்னாருக்கு வருகை தந்துள்ள வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத்தலைவர் சோமபாலகுணதீர மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் வந்த அவர் அகதிகள் நிலை குறித்து செயலக அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(இ-3)

## கமநல சேவை நிலையங்களுடாக விதை உருளைக்கிழங்கு

வலிகாமம் தெற்கு, ஜூன் 24

இவ்வருடப் பயிற்செய்கைக்கு வேண்டிய விதை உருளைக்கிழங்குகள்கமநலசேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்பட உள்ளன.

உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட உள்ள விவசாயிகள் தத்தம் பகுதி விவசாய சம்மேளனங்களினூடாக விதை உருளைக்கிழங்குக்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

உடுவில், தெல்லிப்பழை, கீரிமலை கமநலசேவை நிலையங்களில் விதை உருளைக் கிழங்குக்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட உள்ளன.

விண்ணப்பதாரர்கள் ஒரு பெட்டி விதை உருளைக் கிழங்குக்கு ரூபா 3.500 முற்பணம் கட்டி பதிவு செய்து கொள்ளுமாறு உடுவில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் அறிவித்துள்ளார்.

(இ-152)

## சுயதொழில் வேலைவாய்ப்புக்கு வங்கிகளில் ரூ. 10 ஆயிரம் கடன்

### புதிய திட்டம் விரைவில் அமுல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

குடாநாட்டில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்றவர்கள் வங்கிகளில் 10 ஆயிரம் ரூபா கடனைசுயதொழில் வாய்ப்புக்கு பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அதிகாரிகளுடன் நடத்திய பலசுற்றுப் பேச்சுக்களையடுத்து புதிய கடன் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

மீளக்குடியமர்வு கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை பெறும் ஒருவர் அப்பணம் வைப்பிலிட்ட வங்கியில் இருந்து10 ஆயிரம் ரூபாவை கடனாகப் பெற முடியும்.

15 சதவீத வட்டிக்கு வழங்கப்படும்இக்கடன்சுயதொழில் வாய்ப்பை அளிக்கக் கூடியதான தொழிலை ஆரம்பிக்கும் நோக்குடன் வழங்கப்படுவதாகவும்—

கடன் பெற்று 6மாதகாலத்துக்கு பின் அது மீளளிக்கப்படக் கூடியது என்றும்—அரச அதிபர் மேலும்தெரிவித்தார்.

இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக யாழ். மாவட்ட வங்கிகளுடன் விரைவில் ஆராயப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி தேவஸ்தான சிரமதானம்

அண்மைக் கால அசம்பாவிதங்களால் சேதமடைந்த சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி தேவஸ்தானத்தை மீளமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்டமாக சிரமதான வேலைகள் நாளை புதன்கிழமை (25-6-97) காலை 8.30 மணிக்கு நடத்த திருவருள் கூடியுள்ளது. முருகனடியார்கள் அனைவரும் அன்புடன் வந்து சிரமதான வேலையில் பங்கெடுத்து முருகப்பெருமானின் திருவருளை பெறுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(சி/991) — இடைக்கால புனரமைப்புக் குழு

ஓராண்டு நினைவலைகள்



அமரர் வல்லிபுரம் இராசரெத்தினம்

(ஓய்வு பெற்ற O.L.D.O ஓவசியர்)

அன்னையின் மடியில்: 1933–10–02

ஆண்டவன் திருவடியில்: 1996–07–05

திதி: 24 – 06 – 1997 செவ்வாய்

எங்கள் திருவுருவே!

ஐயா, அன்று நீங்கள் பெரிய கடை போய் வருவேன் என்று விடைபெற்று சென்றீர்கள்: அன்று B. M. C. கடையில் உங்கள் உயிரை கள்வனான கயவன் எங்கு கவர்ந்து கொண்டு சென்றானோ தெரியாது? அப்பா எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உங்கள் நினைவுகள் என்றுமே மறைய மாட்டாது: உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(47959)

## ஆயுதக் கொள்வனவு மூலம் பணக்காரரான அதிகாரிகள்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜூன் 24

ஆயுதக் கொள்வனவு விடயத்தில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு சுதந்திரமாக விடப்பட்டதால் பல உயர் அதிகாரிகள் கமிசன் பெற்று திடீர் பணக்காரராகி விட்டார்கள் என்று கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்தத்தை விரைவாக முடிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதி ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் பணியை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதித்தது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல உயர்மட்ட அதிகாரிகள் கமிசன் பெற்று திடீர் பணக்காரர்களாகி விட்டனர்.

உயர் பதவியில் உள்ள அதிகாரி ஒருவர் தமது மகனை ஐரோப்பியநாட்டில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் சேர்த்துள்ளார்: பல்கலைக் கழகப் படிப்புக்கு 10 லட்சம் ரூபாவையும் உணவு மற்றும் தங்குமிட வசதிக்கு10 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவையும் அந்த பல்கலைக்கழகத்துக்கு வருடாந்தம் அவர் செலவிடுகிறார்.

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(இ-3-150)

## அச்செழு கிராமசேவையாளர் கைது

அச்செழுப் பகுதியில் உள்ள கிராமசேவையாளர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அச்செழுவைத் தலைமையகமாகக் கொண்ட 51 ஆவது படையணியின் கட்டளைப் பீடத்திலிருந்து பத்திரிகை அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,

அதன் விவரம் வருமாறு:-

விடுதலைப் புலிகள் பற்றிய தகவலை தெரிவிக்கத் தவறியதுக்காகவும் —

அப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு உடந்தையாகவும் உதவியாகவும் இருந்ததுக்காகவும் — அச்செழு கிராம சேவையாளர் தேவராசா கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் ஓர் அரச ஊழியர் என்பதை மனதில் கொண்டு ஏற்கனவே இது தொடர்பாக மூன்று தடவைகளுக்கு மேல் படையணியின் கட்டளைப் பீடத்தினால் அவர் எச்சரிக்கப்பட்டிருந்தார்.

எனினும் இந்த எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாது அவர் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கு பல வழிகளிலும் உதவி வந்ததுடன் படையினர் மீது மட்டும் அல்ல பொதுமக்கள் மீதும் சமீபத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மூன்று தாக்குதல் சம்பவங்கள் பற்றிய தகவல்களையும் தெரிவிக்கத் தவறி இருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவுவதை அரச ஊழியர்கள் உட்படப் பொதுமக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் —

புலிகள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கத் தவறுவது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்பதையும்— தெரிவிக்கவிரும்புகிறோம் —

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## நெடுந்தீவிலும் கண் நோய்

நெடுந்தீவு, ஜூன் 24

நெடுந்தீவிலும் கண்நோய் பரவுகிறது. கண்நோய் காரணமாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட நூற்றுக்கு அதிகமானோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி), 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), காலை 11-00. மணியில் இருந்து பார்வையிடலாம். [47938]

C.50 ஹொண்டா மோட்டார் சைக்கிள், குபோட்டா ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. V. பாரதிதாசன் 'தில்லை' கலாநிலையம், வதிரி எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [47965]

வண்டில் உழவு வேலை செய்யக்கூடிய இரண்டு எருத்து மாடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மாரியம்மன் மோட்டோர்ஸ், அருகாமை, மூ: பாலசிங்கம் கோப்பாய். [47966]

### நாடகம் எழுதுவது எப்படி?

சஞ்சீவியில் 'எரிகிற வீட்டில்' சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் "அக்கரைச்சீமையில்" நாவல் ரூபா 25, நாடகம் எழுதுவது எப்படி? கட்டுரைகள் ரூபா 50. [47934]

### சீயாக்காய்ப் பவுடர்

கருசலாங்கண்ணி உட்பட 6 வகை இயற்கைப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது. இப்போது எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. [47961]

### வாங்கப்படும்

காய்ந்த எலுமிச்சம் கோது (பூச்சணவன் பிடிக்காதது) காயாத கருசலாங்கண்ணி (பச்சை) காவேரிசீயாக்காய்ப் பவுடர் தயாரிப்பாளர் இல. 16 ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [47960]

## ஆலய பவனியை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

சாவகச்சேரி டச்சு வீதி, ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயத்தின் 6 ஆவது பழநிவேல் பவனியை முன்னிட்டு மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபையால் தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணவ மாணவிகளுக்கென பேச்சு, பண்ணிசை, கட்டுரை, சமய அறிவு போன்ற சிறப்புப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி ஆகும். போட்டிகள் பற்றிய மேலதிக விவரங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்து அறிந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## பழுதடைந்த மதகு

தென்மராட்சி, ஜூன் 24

யாழ்ப்பாணம் கேரதீவு வீதியில் கோவிலாக்கண்டி குறுக்கு வீதிக்கும் கலையாபரணக் கோட்டை வீதிக்குமிடையில் உள்ள நாவனை வாய்க்கால் மதகு கடந்த இரண்டு வருடங்களாக திருத்தப்படாமல் இருந்து வருகிறது.

இதனை திருத்துமாறு மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனம் யாழ். அரச அதிபர் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-117)

## யாழ். லயன்ஸ் கழகம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

| | |
|---|---|
| முதற் பரிசு | - 0477 |
| இரண்டாம் பரிசு | - 0429 |
| மூன்றாம் பரிசு | - 1204 |

ஆறுதற்பரிசுகள் (பத்து) - 0191, 2063, 2509, 1884, 1869, 0763, 2346, 2254, 0474, 1395.

பரிசு பெறுபவர்கள் 655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும்.

(சி-990) -தலைவர்

## யாழ். தொழில் நுட்பக் கல்லூரி நவீனமயப்படுத்தப்படும்

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்துறையை யாழ்ப்பாண மாணவர்கள் பெறத்தக்க வகையில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி நவீனமயப்படுத்தப்படவிருக்கிறது.

தொழில் நுட்பக் கல்லூரி அபிவிருத்தி தொடர்பாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் வெளிநாட்டுத் தூதர்களுக்கு எடுத்து விளங்கியதையடுத்து பலர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு உதவ முன்வந்துள்ளனர்.

இவர்கள் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் மூலம் நிதி வழங்க முன்வந்துள்ளதையடுத்து, தொழில் நுட்பக் கல்லூரிக்கு தேவையான இயந்திராதிகள், உபகரணங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய தொழில் நுட்பக் கல்லூரி அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி சௌபாக்கியவதி நவரத்தினராசா

(ஆசிரியர், யா/வட இந்து மகளிர் கல்லூரி)

அன்னையின் மடியில்: 14-12-1957

ஆண்டவன் பிடியில்: 18-06-1992

திதி: 24-06-1997


ஆண்டு ஐந்து ஆனதம்மா ஆறவில்லை எங்கள் மனம். எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:
அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், மருமக்கள்,
உறவினர்கள்.

கணேசன் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/956)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 09 — 1922

மறைவு: 04 — 07 — 1996

### அமரர் சங்கரப்பிள்ளை கதிரவேலு

திதி: 24-06-97

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி வீசி நல்வழி காட்டி எங்களை வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.

நவக்கிரி,
புத்தூர்

(47277)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 11 — 09 — 1934

உதிர்வு: 24 — 06 — 1996

### க. சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

திதி: 13-07-1997

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்புத் தெய்வமே அணையாத ஜோதியே
அன்பின் ஊற்றாய் இருந்தீர்களே
அறிவின் சிகரமாய் விளங்கினீர்களே
இன் நிழலாய் இருந்தெம்மை சிறப்போடு வளர்த்தீர்களே
மின்னல் போல் மறைந்தீர்களே மிக்கதுயர் அடைகின்றோம்.
சென்றது எங்கே அப்பா? செந்திருவே
உங்கள் அன்பு முகம் காணாது தவிக்கின்றோம் அப்பா.
எங்களைப் பிரிந்துதான் ஓராண்டு போனதுவே அப்பா
பூமியில் மலர்ந்து வாழ்வின் விருப்பங்களை மண்ணிலே வரைந்துவிட்டு
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு எங்கு சென்று மறைந்தீர்கள் அப்பா?

என்றும் மறக்கமுடியாத பாச நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செருக்கல் ஒழுங்கை,
டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி-983)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



உதயம்: 15 — 03 — 1961

அஸ்தமனம்: 04 — 06 — 1996

### சண்முகராசா உதயகுமார் (உதயம்)

(முன்னாள் உரிமையாளர், செட்டியார் களஞ்சியம்)

அன்புச் செல்வமே! அருமை மகனே!
அழகொளிரும் பரிதியே உதயா!
மன்றாடி நின்றோம் மறந்திட்டான் காலதேவன்.
சென்றதே ஆண்டு ஒன்று
சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம்
புன்சிரிப்பின் புகலிடமே!
போன இடம் சொல்லாயோ?
ஆறாது ஆறாது நெஞ்சம்
அழுதாலும் தீராது துன்பம்.
வேறாகி மாறாத பந்தம்
எங்கள் விழிநீரே! உதயம்
என்ற நாமம் மங்கியதோ உன் மஞ்சம்.
மகனே! மீளாத்துயில் கொண்டு ஆண்டு
ஒன்று ஓடி மறைந்தாலும் மாறாது மறையாது
ஒளி வீசும் உன் உருவம்.

உன் பிரிவால் துயரில் துடிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி,
தங்கைமார், மைத்துனர்மார்,
உறவினர், நண்பர்கள்.

சி. சண்முகராசா,
75, மானிப்பாய் வீதி,
வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

(47962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொறுப்பு யார்?

தற்கொலைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறும் நாடுகளில் இலங்கை முன்னணியில் நிற்பதாக மதிப்பீடுகள், ஆய்வுகள் தெரிவித்துள்ளன. கடந்த பதிநான்கு ஆண்டுகளில் எழுபதாயிரம் பேர் தற்கொலை செய்திருக்கின்றார்கள் என்பது புள்ளிவிவரம், இந்நாட்டில் நாளாந்தம் சராசரியாக 23 பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

தற்கொலை நாட்டின் கொடிய சமூக வியாதியாகப் பரவி வருவதனையே இந்தப் புள்ளிவிவரங்களும் தகவல்களும் வெளிப்படுத்துகின்றன. இந்தச் சமூக நோய்க்கு நாட்டின் பொருளாதார நிலையும், அரசியல் நிலையும் பிரதான காரணிகள் ஆகின்றன. சமூகத்தில் உள்ள மேடு பள்ளங்களும், ஒழுக்கக் கேடுகள் மற்றும் கலாசாரக் கேடுகளும் தற்கொலைகளுக்கான முதன்மைக் காரணங்கள் எனலாம்:

தனக்கு உணவு கிடைக்காத வேளையிலும், தன் பிள்ளைகளைச் சரிவரப் பராமரிக்க முடியாத கட்டத்திலும், வேலை தேடிக்கிடைக்காத வேளையிலும் மனம் தளர்ந்து விரக்தி நிலையை எய்தித் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவோர் பலர்.

இத்தகைய தற்கொலை முயற்சிகளுக்கு, தற்கொலைகளுக்கு நாட்டை ஆளும் அரசே பொறுப்பேற்கவேண்டும். தற்கொலை செய்ய முற்படுபவனைத் தண்டிப்பதற்குச் சட்டம் இயற்றும் அரசு, மக்களுக்குரிய வாழ்க்கை வசதிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதில்லை. அரசியலாரின் கோணிய ஆட்சியும் தவறான நிர்வாகமும் வாழ்க்கையில் மக்கள் விரக்தி அடைவதற்கு ஏதுவாகின்றன.

ஆகையால், தற்கொலைகள் அதிகரிப்பது குறித்து ஆராய்வதோடும் அறிக்கை சமர்ப்பிப்பதோடும், காரணங்களைக் கண்டறிவதோடும் அரசு தனது பொறுப்பை முடித்துக் கொள்ளக் கூடாது. காரணங்கள் வெவ்வேறு வகையினதாக இருப்பினும், அவற்றில் பலவற்றுக்கு அரசாங்கத்தின் இயலாமையும் அக்கறை இன்மையுமே அடிகோலிகள் ஆகிவிடுகின்றன.

உதாரணத்துக்கு ஒன்று: கடந்த 14 வருடங்களாகத் தமிழ்ப் பிரதேசங்களில் போர் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்பகுதி வாழ் மக்களின் அடிப்படைவாழ்வே ஆட்டங்கண்டுள்ளது. அதனால் தமிழ்ப் பொதுமக்களில் மிகப்பெரும்பாலானோர் வாழ்க்கையில் விரக்தியுற்று தற்கொலை செய்தால் என்ன என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயினும் அந்த நிலையைப் போக்குவதற்கு ஆக்கபூர்வமான உருப்படியான நடவடிக்கை எதுவும் இல்லை. போரை நிறுத்தும் உத்தேசமே அரசுக்கு இல்லை. அவ்வாறெனில் தமிழர்கள் மத்தியில் தற்கொலைகள் ஆரம்பமானால் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டியது யார்?—அரசாங்கமே!

இது போலவே தற்கொலைகளில் பல வகைகளுக்கு அரசு பொறுப்பேற்க நேரிடும்; அவற்றைத் தடுக்கப் பொறுப்புடன் நடந்து கொள்ளாவிடில்!

# பெற்றோர், ஆசிரியர், மாணவருக்கு இராணுவத்தினரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

சகல பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என்ற தலைப்பில் அச்செழுவைத் தலைமையகமாக கொண்ட 51 ஆவது படையணியின் கட்டளைப் பீடம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:

1. அப்பாவிப் பொதுமக்களுக்கு மரணங்கள், காயங்கள் ஏற்படும் அளவுக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமும் —

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதத்தில் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளைப் படையினர் அமுல் செய்ய வேண்டிய நிலைமையை உருவாக்குவதன் மூலமும் —

யாழ். குடாநாட்டின் ஸ்திர நிலையைக் குழப்புவதற்குப் புலிகள் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்;

எனினும் அமைதியை விரும்பும் யாழ்ப்பாண மக்கள் தாமாகவே முன்வந்து படையினருக்குக் கொடுத்த தகவல்கள் மூலம் புலிகளின் இந்த முயற்சிகள் பெரிய அளவில் தடுக்கப்பட்டுள்ளன.

புலிகள் பற்றிய இப்படியான தகவல்களைப் படையினருக்கு நேரடியாகவும் —

கடிதம் மூலமும் —

மூன்றாம் பேர்வழி மூலமாகவும் — பொது மக்கள் வழங்கி வருகின்றனர்.

2. படையினரிடம் இருந்து தப்புவதற்காகப் பாடசாலை மாணவர்கள் போன்று சீருடை அணிந்து வருவது புலிகள் மேற்கொண்டுள்ள ஆகப்பிந்திய தந்திரம் ஆகும். புலி உறுப்பினர்கள் சிலர் பாடசாலைகளில் மாணவர்களாகவும் சேர்ந்துள்ளனர். இவர்கள்பாடசாலை நேரங்களில் வகுப்புகளில் இருந்து விட்டு பாடசாலைகள் முடியத் தங்களுடைய பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். சமீபத்தில் யாழ்.குடாநாட்டிலும்வடக்கு-கிழக்கிலும் இடம் பெற்ற சில சம்பவங்கள் மூலம் இது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் விடும் நேரங்களில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக படையினரின் பரிசோதனைகளிலிருந்து விடுபடுவதை எதிர்பார்க்கும் பாடசாலைச் சீருடையில் உள்ள இத்தகையவர்கள் படையினர் மீது தாக்குதலை நடத்துவதன் மூலம் பாடசாலை மாணவர்களும் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு வழி வகுக்கிறார்கள். பாடசாலைச் சீருடையில் வரும் இத்தகைய புலி உறுப்பினர்கள் குறித்த தகவல்களை சமாதானத்தை விரும்பும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பாதுகாப்புப்படையினரின் நடவடிக்கைக்காக உடனடியாகத் தெரியப்படுத்துமாறு பாதுகாப்புப் படையினர் ஆலோசனை தெரிவிக்கிறார்கள்.

3. கடந்த காலங்களில் செயற்பட்டது போன்று, சமாதானத்தை விரும்பும் யாழ். மக்கள் இந்த விடயத்திலும் துணிச்சலுடன் செயற்படுவார்கள் என்று நம்புகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## உக்ரைன் நாட்டின் 8 விமானப் பயிற்சியாளர்களும் நாடு திரும்பினார்கள்

கொழும்பு ஜூன் 24

இலங்கைவிமானப்படையின் பயிற்சியாளராகப் பணியாற்றிய எட்டு உக்ரைன் நாட்டுப் பயிற்சியாளர்களும் ஒப்பந்த காலம் முடிந்து நாடு திரும்பினார்கள்.

ஏ. என். 32 ரக விமானங்களையும், எம், ஐ. 24 ரக ஹெலிகளையும் இலங்கைக்கு விற்ற சமயம் இந்தப் பயித்சியாளர்களை உக்ரைன் இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

அவற்றில் பணியாற்றுபவர்களுக்குப் பயிற்சி அளிக்கவே இவர்கள் இரு வருடங்கள் இலங்கையில்பணியாற்றினர்.

இவர்கள் நாடு திரும்பியமை குறித்து விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தகவல் தெரிவிக்கையில்— ''அவர்களது ஒப்பந்தம் முடிவுற்றதால் அவர்கள் நாடு திரும்பினார்கள்.

'' மேலும் விமானங்களை நாம் வாங்க முடியும். அவற்றில் பயிற்சி பெற்ற நிபுணர்களைப் பெறுவதுதான் கஷ்டமானது'' என்றார். (உ-150-3)

## குருநகர் இறங்குதுறை புனரமைப்பு; நேற்று வைபவரீதியாக ஆரம்பம்

குருநகர், ஜூன் 24

குருநகர் இறங்கு துறையும் அப் பகுதியில் இடைத்தங்கல் முகாம் ஒன்றும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதற்கான வேலைகள் நேற்று அங்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், கொழும்பில் இருந்து வருகை தந்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேஜர், ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி அருஒவ்ஸ்ராண்ட், உலக உணவுத் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோசப் கைலாஸ், அகதிகளுக்கான ஐ நா. அபிவிருத்தி அமைப்பின் யாழ். கிளைத் திட்டப் பொறுப்பாளர் நா. பாலகிருஷ்ணன், யாழ். பிரதேச செயலர் து. வைத்திலிங்கம், யாழ். பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர், யாழ். மீன்பிடித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜோசப் படை அதிகாரி மேஜர் றொஹான், றெக்ளமேசன் கிழக்கு கிராமசேவையாளர் ஜே. அன்ரனி மற்றும் குருநகர் கடற்றொழில் சங்கப்பிரதிநிதிகள், ஐக்கிய முன்னணி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அத்திவாரக்கல் நடப்படுவதற்கு முன்னர் ஐ. நா. அமைப்பின் பிரதிநிதிகளும் அரச அதிபர் பிரதேச செயலர் மற்றும் ஏனையோரும் சேதமடைந்த குருநகர் இறங்குதுறையைப் பார்வையிட்டனர். (ஐ-51)

## இரு இளைஞர்கள் கோப்பாயில் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 24

கோப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்ததாகத் தெரிவித்து இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் இரவு கோப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இரு இளைஞர்களினதும் சடலங்கள் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

இதற்கிடையில் —

கோண்டாவிலில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் இரு புலிகள் உயிரிழந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது. அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கோண்டாவிலில் படையினர் மீது கைக்குண்டு வீசப்பட்டது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தியபோது புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றுமொருவர் காயமடைந்தார். காயமடைந்தவர் பின்னர் சயனைட் விழுங்கி தற்கொலை செய்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து புலிகளின் சடலம், பிஸ்டல் ஒன்று, வெடிமருந்துகள், சயனைட் வில்லைகள் போன்றவற்றை படையினர் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-3-15)

### நாளை

**ஆனி 11**

புதன்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 3.26 வரை.

நட்சத்திரம்: அவிட்டம்

முற்பகல் 9.58 வரை.

சுபநேரம்: 4.25- 5.55

ராகுகாலம்: 11.55-1.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இன்று நடைபெறும் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 24

காங்கேசன்துறையில் இருந்து இன்று திருகோணமலைக்கும், மன்னாருக்கும் கப்பல் சேவைகள் இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

திருகோணமலைக்கு ''நியூகோ எண்டியூரன்ஸ்'' கப்பலில் ஆயிரம் ரூபா கட்டணத்தில் செல்ல முடியும் என்றும்—

மன்னாருக்கு ''தாரகி'' கப்பல் மூலம் செல்லலாம் என்றும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்ல அனுமதி பெற்றவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## சென். ஜேம்ஸ் முத்தமிழ் விழா

குருநகர், ஜூன் 24

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று காலை 9.00 மணிக்கு பொறுப்பாசிரியர் திருமதி ஆர். ஜி. சுகந்தநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வேலணை, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம் கல்விக் கோட்டங்களின் நிதி உதவியாளர் பா. சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'சாகாத மனிதம்' நாடகம் விழாவில் இடம் பெறும். (ஐ-51)

## முகாமை நோக்கு சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் வருடாந்த வெளியீடான ''முகாமை நோக்கு'' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு மன்றத் தலைவர் க. யோகநாதன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆசியுரை வழங்குவார். முகாமைத்துவத் துறைத்தலைவரும், மன்றக் காப்பாளருமான மா. நடராஜசுந்தரம் வெளியீட்டுரை ஆற்றுவார். அறிமுகவுரையை கல்வியியற்றுறை விரிவுரையாளர் எம். சின்னத்தம்பி வழங்குவார். சஞ்சிகையின் முதற்பிரதியை பதிவாளர் கலாநிதி க. குணராசா பெற்றுக்கொள்வார். (ஐ)

## குடாக்கடலில் நீண்ட தூரம் நடந்து குருநகர் வந்தடைந்த அகதிகள்

### ஐ. நா. அதிகாரிகள் நேரில் பார்த்தனர்

குருநகர் ஜூன் 24

வன்னியில் இருந்து சுமார் 500 பேர் நேற்றுக் குடாக் கடல் ஊடாக குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

இவர்களை ஏற்றி வந்த வள்ளங்கள் கல்முனையில் இருந்து ஒன்றரை மைல் தூரத்தில் கடலின் மத்தியிலுள்ள மண்பிட்டி என்ற தரைப்பகுதியில் இறக்கிவிட்டு கல்முனைக்கு திரும்பின.

மணற்பிட்டியில் இறக்கிவிடப்பட்ட அகதிகள் அங்கிருந்து தமது மூடை முடிச்சுகளுடன் ஆழங் குறைந்த கடல் நீரில் இறங்கி நீண்ட தூரம் நடந்து குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

நீண்ட தூரம் நீரில் நடந்து வந்ததால் அவர்கள் மிகவும் களைத்து சோர்வுற்ற நிலையில் காணப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கோப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, கரவெட்டி, கொட்டடி, நாவாந்துறை, மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

நேற்று குருநகர் இறங்குதுறைப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் இந்த அகதிகளின் அவல நிலையை நேரில் கண்டனர்; அத்துடன் அவர்களுடன் நேரில் உரையாடித் தகவல்களைச் சேகரித்தனர். (ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரா' அமைப்பின் உறுப்பினர் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 24

சிங்கள தீவிரவாத இயக்கமான 'பிரா' அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வென்னப்புவவில் கைது செய்யப்பட்டிருப்பதாக தனியார் வானொலிச் சேவை ஒன்று அறிவித்தது.

1988 முதல் 1993 வரை பிரா இயக்கத்துடன் தொடர்பு பட்டிருந்தவர் எனக் கருதப்படும் இந்நபர், அதற்குப் பிறகு இந்தியா சென்று ஈ.பி.ஆர்.எல்.எவ் விடம் பயிற்சி பெற்றதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவர் போக்குவரத்துச் சபை சாரதி என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-21)

## நிர்வாக தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்ட பரியோவான் முதலுதவி சங்கமும், படையும் நடத்தும் நிர்வாகத்தின நிகழ்ச்சிகளுள் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## அறுவர் கைது

கொழும்பு, ஜூன் 24

விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிந்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆறு பேரை திருமலை பொலீஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளனர்.

உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், வாகன உதிரிப்பாகங்கள் என்பவற்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினார்கள் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஐ)


## திறப்புவிழா

வஸ்தியன்ஸ் சைனீஸ் றெஸ்ரோரண்ட் அன்ட் ஹோட்டல்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

வஸ்தியன்ஸ் சைனீஸ் றெஸ்ரோரண்ட் அன்ட் ஹோட்டல் ஸ்தாபனம்,

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன்

அவர்களால் இன்று (24-06-97) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு (பழைய நேரம்) திறந்துவைக்கப்படும்.

-- நிர்வாகத்தினர்

(47974)


## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி ஆசைப்பிள்ளை

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சின்னக்குட்டி ஆசைப்பிள்ளை 23-06-97 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுவின் அன்புக் கணவரும், கு. பூமலர் (கொழும்பு), சுப்பிரமணியம் (மின்னியலாளர் சிமெந்துக் கூட்டுத்தாபனம், K K S, உரிமையாளர், ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி), இராசமலர் (அதிபர், கதிரிப்பாய் சுப்பிரமணியர் வித்தியாசாலை), யோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குமரேசு, மாணிக்கம் (இணைப்பாளர், பனை அபிவிருத்திச் சபை, கிளிநொச்சி - முல்லைத்தீவு), சற்குணவதி, சிவலிங்கம் (முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி மற்றும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, செல்லர் அன்னப்பிள்ளை, பொன்னு ஆகியோரின் சகோதரரும் ச. செல்லரின் அன்பு மைத்துனரும் கிருஷ்ணகுமாரி, லோகநாதன் (நோர்வே), ஜீவகுமார் (நோர்வே), சுரேஸ்குமார் (கியூபா) பிரதீபன், சுகன்யா, காண்டீபன், அனுஷா, வித்தியா, (அச்சுவேலி மகா. வித்) சுதர்சன் (ஜேர்மனி), லிங்ககுமார்-சுமதி (ஜேர்மனி), சுவேதா (உயர்தரமாணவி ஸ்கந்தபுரம் மகா. வித்), சஞ்சீவன் (ஸ்கந்தபுரம்), சுஜீவன் (பின்லாந்து), சுனீதா, ரமணன் (உயர்தர மாணவன், மகா வித்தியாலயம் அச்சுவேலி), நீரஜா, காலஞ்சென்ற மகேந்திரராசா (முன்னாள் பொது முகாமையாளர், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயசுதா, ஜெனோசிலன், அகல்யா, றெபேக்கா, தீபா (நோர்வே) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-6-97 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கல் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சிவலிங்கம்
(மருமகன்)

மகா வித்தியாலய வீதி,
அச்சுவேலி வடக்கு.

(47971)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# முஸ்லிம் காங்கிரஸ் இல்லையேல் எமது இளைஞர்கள் புலிகளுடன்

## அஷ்ரப் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 24

''முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஓர் அமைப்பு உருவாகியிரா விட்டால் முஸ்லிம் இளைஞர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருப்பார்கள்''

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறையில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் மோதிக் கொள்வார்களேயானால் விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்டத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள் என்றும் அவர் எச்சரித்தார்.

(ஐ-150-3)

## பொலீஸ் நிலையம் வாபஸ்

கொழும்பு, ஜூன் 24

திருகோணமலை மாவட்டத்தில் சல்லிப் பகுதியில் இயங்கி வந்த பொலீஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட மூன்று பொலீஸார் அண்மையில் இப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே அப்பொலீஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது.

தற்சமயம் அப்பகுதியில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## கூரேயின் கைதை ஆட்சேபிக்கும் ஐ.தே. கட்சியின் மனு மீதான விசாரணை இன்று நடக்கும்

கொழும்பு ஜூன் 24

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரேயை விடுதலை செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான பூர்வாங்க விசாரணை இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச தரப்பில் ஆஜரான பிரதி ஜொலிஸிட்டர் ஜெனரல் சி. ஆர். டி. சில்வா மேற்படி மனுவை அரசதரப்பு பரிசீலனை செய்வதற்கு கால அவகாசம்கோரியதையடுத்து பூர்வாங்கவிசாரணைஇன்று வரைஒத்திவைக்கப்பட்டது.

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்)

கேற்ப இன்னும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவில்லை.

இதேவேளை—

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா மீண்டும் தபால் தொலைத் தொடர்பு, தொடர்புசாதன பிரதி அமைச்சராக நேற்று பதவிப் பிரமாணம் செய்தார்.

ஏற்கனவே தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த அனுரா பிரியதர்சன யாப்பாவும் தமது பதவியில் பணியாற்றுவார் என அறிவிக்கப்பட்டது.

(உ-ஐ-21)

## புளியங்குளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

நேற்றைய சமரில் புலிகள் தரப்பில் 11 பேர் உயிரிழந்ததாகவும், 31 பேர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டன.

நேற்றைய சமரின் இழப்புகள் தொடர்பாக புலிகள் தரப்புத் தகவல் ஏதும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

வவுனியா — ஓமந்தையில் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் நடந்த மோதல்களில் ஏழு புலிகள் உயிரிழந்ததாகவும்—

அவர்களின் சடலங்களும் 'ரி-56' மற்றும் 'ரி-81' ரக துப்பாக்கிகள், கிரனேட்டுகள் போன்றவையும் அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(உ-21-3-164)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

துருப்புக்களுக்கு உதவியாக விமானக் குண்டு வீச்சு தாக்குதல்களும், ஹெலிக்கொப்டர்தாக்குதல்களும் இடம் பெற்று வருகின்றன.

இத்தாக்குதல் சத்தங்கள் வவுனியா வரையில் கேட்டதாக எமது வவுனியாச் செய்தியாளர் தெரிவித்தார்.

நேற்று மதியம் வரை முன்னேறும் படையினருக்கு அதிக எதிர்ப்புக் கிட்டவில்லை என்றும்—

ஆனால் மதியத்துக்குப் பின்னர் கடும் சண்டை மூண்டதாகவும்— [illegible] குறிப்பிட்டது.

# இந்திய ஜனாதிபதிப் பதவிக்கு 64 பேர் வேட்பு மனு!

இந்திய ஜனாதிபதி பதவிக்காக நடைபெறவுள்ள தேர்தலில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு நேற்று கடைசி நாளாகும். நேற்று வரை மொத்தம் 64 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

எனினும் வேட்புமனுக்களை எவரும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் விலக்கிக்கொள்ளலாம்.

இத்தேர்தலில் போட்டியிடுபவர்களில் தற்போதைய துணை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனும் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷனும் முக்கிய வேட்பாளர்களாவர்.

ஜனாதிபதிக்கான தேர்தல் நடத்த வேண்டியதேவை ஏற்படின் அதற்கான தேர்தல் அடுத்த மாதம் 14ஆம் திகதி நடைபெறும்.

இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளில் சிவசேனா தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளும் கே. ஆர். நாராயணனை ஆதரித்துள்ளன.

## ஒத்திவைப்பு

வடக்கு—கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் போட்டிகளை ஜூலை 4ஆம் 5ஆம் திகதிகளில் அம்பாறையில் நடத்த முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் இடம் திருகோணமலைக்கு மாற்றப்பட்டது. இப்போது போட்டி நடத்தப்படுவது மேலும் ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. (உ)

## தமிழ்த்தினப் போட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

2 ஆம் இடம் — 5, 3 ஆம் இடம் — 11.

**திருகோணமலை**

திருகோணமலை:- முதலாம் இடம் — 11, இரண்டாம் இடம் — 10, மூன்றாம் இடம் — 9.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு:- முதலாம் இடம் — 10, இரண்டாம் இடம் — 7, மூன்றாம் இடம் — 4.

**கல்முனை**

கல்முனை:- முதலாம் இடம் — 2, இரண்டாம் இடம் — 5, மூன்றாம் இடம் — 4.

**வவுனியா**

வவுனியா:- முதலாம் இடம் — 6, இரண்டாம் இடம் — 6, மூன்றாம் இடம் — 4.

**மன்னார்**

மன்னார்:- முதலாம் இடம் — 3, இரண்டாம் இடம் — 6, மூன்றாம் இடம் — 4.

யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றி முதலிடங்களைப் பெற்ற மாணவர்கள், பாடசாலைகள் விவரம் வருமாறு:

**பிரிவு 1**

★ வாசிப்பு — ம. லோகவரணி (மகாஜனா)

**பிரிவு 2**

★ இசை (தனி) — ச. லக்மன் (மகாஜனா)

**பிரிவு 3**

★ பாவோதல் — செல்வி துஷாரா (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ இசை (தனி) — செல்வி சிறி சிறிமகள் (வேம்படி)

**பிரிவு 4**

★ சிறுகதை ஆக்கம் — செல்வி கி. ஆரபி (ஸ்கந்தா)

★ இசை (தனி) — செல்வி இ. தாரணி (வேம்படி)

**பிரிவு 5**

★ இசை (தனி) — செல்வன்சி. அகிலன் (பரியோவான் கல்லூரி)

★ நடனம் (தனி) — செல்வன் சிறிகண்ணன் (பெரியபுலம் ம.வி.)

**திறந்த போட்டிகள்**

★ குழு நாடகம் (பிரதி ஆக்கம்) — ம. பிரவீனன் (யூனியன் கல்லூரி)

★ நாட்டிய நாடகம், ஆடல் கலை — இராமநாதன் கல்லூரி

★ விவாதம் — ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (பங்குபற்றியோர்:- நா. நிசாந்தன், பு. பாலேந்திரா, ஆ. உதயகுமார்)

★ தமிழ் அறிவுப் போட்டி — கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி

சனிக்கிழமை ஆரம்பமான தமிழ் மொழித் திறன் போட்டிகள் நேற்று பூர்த்தியடைந்து மாலையில் பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org